Deccan chronicle
Dated: 11.01.2025

■ Challenges EC to release CCTV footages

# NCP-SP neta alleges booth capturing in Parli Assembly

SONU SHRIVASTAVA
MUMBAI, JAN. 10

Sharad Pawar-led NCP (SP) on Friday made serious allegations against the state branch of Election Commission of India (ECI) in connection with the alleged booth capturing in the Parli Assembly constituency of Beed district. Senior NCP (SP) leader Jitendra Awhad alleged that 201 booths were alleged that the district collector, SP of Beed and an election observer were hand in gloves in the booth capturing and demanded that the ECI should make public the CCTV footage of 122 polling booths.

Nearly 50 days after the Assembly election results were announced, NCP (SP) made these allegations. NCP (SP) candidate Raje Saheb Deshmukh was defeated by Dhananjay Munde by the margin of more than one lakh votes.

> NCP (SP) leader said that the Bombay high court had directed to provide tight security to 122 booths with continuous monitoring by CCTVs

Addressing a press conference at NCP (SP) office in South Mumbai, Mr Awhad said that the way the polling booths were captured in the Parli Assembly constituency, he is worried about how the republic can remain alive in the country.

"If it is decided by the administration that a particular candidate should be chosen, the administration can do anything. The best example of this is the Parli Assembly constituency in Beed," he said.

The senior NCP (SP) leader also claimed that there are 386 polling booths in Parli Assembly. Of these, there was booth capturing at 201 places. We have video clips of four polling booths, he claimed.

Mr Awhad further said that the Bombay high court had directed to provide tight security to 122 booths with continuous monitoring by CCTVs. "We demand that the ECI should make CCTV footage of 122 booths available in public domain," he said.

Challenging the ECI to prove his allegations wrong by releasing the video footage of 122 booths, Mr Awhad claimed that when a voter went to the polling booth, he was inked by the election officer but subsequently someone else pressed the EVM button. He had shared a video of the same on his X handle.

Deccan chronicle
Dated: 11.01.2025

# FREEBIES DOMINATE DELHI ELECTIONS

DC CORRESPONDENT
NEW DELHI, JAN. 10


Delhi's political discourse is currently being dominated by conversations around "freebies" ahead of the Assembly polls overshadowing other major issues, including pollution, law and order, crimes against women, and infrastructure.

While AAP supremo Arvind Kejriwal has promised financial assistance to Residential Welfare Associations (RWAs) to hire security guards when the party returns to power in the national capital, Congress has countered it with its 'Pyaari Didi Yojana,' offering ₹2,500 monthly for women, alongside the 'Jeevan Raksha Yojana,' which promises insurance coverage of up to ₹25 lakh.

Even Prime Minister Narendra Modi, who termed these free schemes as 'free ki revdi' once.

Deccan Chronicle

Dated: 11.01.2025



K.Padmarajan, an independent, nicknamed 'Election King' for having contested in a record number of elections, submits his nomination papers for the bypoll to the Erode (East) Assembly constituency with Returning Officer and Corporation Commissioner N.. Manish on Friday. Three candidates, including two independents, filed their nomination papers on Friday to contest the byelection scheduled on February 5. Candidates can file their nominations on January 13 and 17, while scrutiny of the papers will take place on January 18. The last date for withdrawing candidature is January 20. —*Zakeer Hussain*

D.T.Next

Dated: 11.01.2025

## NTK gets state party status, no symbol yet

**CHENNAI:** The Election Commission of India (ECI) has recognised Seeman's Naam Tamilar Katchi (NTK) as a state party in Tamil Nadu based on its performance in the Lok Sabha polls, in which it secured over 8 per cent vote share. However, the commission stated that it could not allocate the symbols they had sought. The NTK leadership has been advised to propose a preference from the list of free symbols available on the ECI's website or propose three new symbols for the ECI's consideration, Ashwani Kumar Mohal, ECI secretary, said in an official communication to the NTK president on Friday.

D.T.Next

Dated: 11.01.2025

# Erode East bypoll: 3 file papers on Day One

**COIMBATORE: Three independent candidates, including 'election king' K Padmarajan, filed their nominations, on the first day when nominations were thrown open for Erode East bypoll on Friday.**

'Election king' K Padmarajan, a native of Mettur in Salem, didn't disappoint this time too. He was the first to file his nomination for the bypoll warranted following the demise of leader EVKS Elangovan.

"I am contesting for the 247th time in an election. I contested last in the Wayanad Lok Sabha polls. Since 1988, I have been unsuccessful in contesting in the polls, and that's my success. My intention is not to win but to lose. I have spent Rs one crore so far to contest in polls," he said to the media after handing over his papers for contesting.

Another independent, K Maduraivinayakam, ex-army officer from Attur in Karur, filed his nomination in armed forces attire. "I have served the nation in the Army for 22 years. After retirement, I decided to serve people by contesting the polls," he said. He had already contested unsuccessfully in Pollachi LS poll and Vikravandi by-poll.

Similarly, another independent, Noor Muhammed from Coimbatore, who had contested several polls unsuccessfully, came to file the nomination performing funeral music. He was carrying a firepot and a conch, wearing a symbolic dress of a graveyard worker.

"I intend to sound a death knell to the culture of getting money for votes. I wanted to perform a funeral to the practice of cash for votes in polls," he said.

The Hindu (Tamil)

Dated: 11-01-2025

### அதிமுக உள்கட்சி விவகாரங்கள் குறித்து விசாரிக்க

# தேர்தல் ஆணையத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும்

### உயர் நீதிமன்றத்தில் புகழேந்தி மனு தாக்கல்

**சென்னை**

அதிமுக பொதுச்செயலாளராக பழனிசாமி தேர்வு செய்யப்பட்டது உள்ளிட்ட உள்கட்சி விவகாரங்கள் தொடர்பாக எந்த விசாரணையும் நடத்தக் கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை நீக்கக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் வா.புகழேந்தி மனுதாக்கல்செய்துள்ளார்.

அதிமுக உள்கட்சி விவகாரங்கள் தொடர்பாக நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்குகளில்தீர்வுகாணும்வரை இரட்டை இலை சின்னத்தை அதிமுகவுக்கு ஒதுக்கக் கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் 4 வாரங்களில் ஓபிஎஸ், இபிஎஸ் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் அழைத்து விசாரித்து தீர்வு காண வேண்டும் என உத்தரவிட்டிருந்தது. அதன்படி தேர்தல் ஆணையம் அனைத்து தரப்பினருக்கும் நோட்டீஸ் அனுப்பி விசாரணை நடத்தியது.

இந்நிலையில் அதிமுக பொதுக்குழு தீர்மானங்கள் மற்றும் அதிமுக பொதுச்செயலாளராக பழனிசாமியை அங்கீகரித்த உத்தரவை மறுஆய்வு செய்யக்கோரி, முன்னாள் எம்.பி-க்கள் ரவீந்திரநாத், கே.சி. பழனிசாமி மற்றும் வழக்கறிஞர் ராம்குமார் ஆதித்தன் உள்ளிட்டோர் தேர்தல் ஆணையத்தில் மனு அளித்திருந்தனர்.

இதற்கு பதிலளிக்கும்படி அதிமுகவுக்கு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பியிருந்த நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அதிமுக உள்கட்சி விவகாரம் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது. இந்நிலையில் இந்த தடையை நீக்கக்கோரி அதிமுக ஒருங்கிணைப்பு குழு சார்பில் பெங்களூரு புகழேந்தி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், "டெல்லி உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இரட்டை இலை சின்னம் மற்றும் அதிமுகவின் உள்கட்சி பிரச்சினை தொடர்பாக தேர்தல் ஆணையத்தில் மனு அளித்து விசாரணை நடந்துவரும் சூழலில், பழனிசாமி உண்மைக்குப் புறம்பான தகவல்களை சென்னை உயர் நீதிமன்றத்தில் அளித்து இடைக்காலத் தடையுத்தரவு பெற்றுள்ளார். எனவே அந்த தடையை நீக்க வேண்டும்" எனக் கோரியிருந்தார்.

இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேண்டுமென நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் அமர்வில் புகழேந்தி தரப்பில் வழக்கறிஞர் திருமூர்த்தி முறையீடு செய்தார். அதையேற்க மறுத்த நீதிபதிகள், இந்த மனு, ஜன.27 அன்று விசாரிக்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

The Hindu (Tamil)

Dated: 11.01.2025

# நாம் தமிழர் கட்சிக்கு மாநில கட்சி அங்கீகாரம் அளித்தது தேர்தல் ஆணையம்



■ சென்னை

நாம் தமிழர் கட்சிக்கு மாநில கட்சி அங்கீகாரம் வழங்கி இந்திய தேர்தல் ஆணையம் உத்தர விட்டுள்ளது.

திரைத்துறையில் இருந்து ஈழத் தமிழ், தமிழ் தேசியம் போன்ற முழக்கங்களோடு அரசியலில் நுழைந்தவர் சீமான். நாம் தமிழர் இயக்கமாக செயல்பட்டு வந்ததை, கடந்த 2010-ம் ஆண்டு நாம் தமிழர் கட்சியாக மாற்றி, தலைமை ஒருங்கிணைப்பாளராகவும் சீமான் செயல்பட்டு வருகிறார். அங்கீகரிக்கப்படாத கட்சியாக இருந்து வந்தது. தேர்தல் ஆணைய விதிப்படி, அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக மாற, சட்டப்பேரவை தேர்தலில் 6 சதவீத வாக்குகளுடன் 2 சட்டப்பேரவை தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். அல்லதுபேரவைத் தொகுதிகளில் மொத்த தொகுதிகளில் 3 சதவீத இடங்களை பெற வேண்டும்.

அல்லது மக்களவைத் தேர்தலில் 6 சதவீத வாக்குகளுடன் ஒரு மக்களவை தொகுதியில் வெற்றி பெற வேண்டும். அல்லது 8 சதவீத வாக்குகளை பெற வேண்டும்.

இந்நிலையில், கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி 6.58 சதவீத வாக்குகளை பெற்றது. இதனால் அங்கீகாரம் கிடைக்கவில்லை. இதனால், அக்கட்சியின் கரும்பு விவசாயி சின்னம் பறிபோனது.

இந்நிலையில், கடந்த மக்களவைத் தேர்தலில் 8.22 சதவீத வாக்குகளை பெற்றதால், மாநில கட்சி அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இது தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையம், அனுப்பியுள்ள கடிதம்:

தேர்தல் சின்னங்கள் சட்டம் 1968, பிரிவு 6ஏ-ன் விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிபந்தனைகளை கடந்த மக்களவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி பூர்த்தி செய்திருக்கிறது. எனவே தமிழகத்தின் மாநில கட்சியாக அங்கீகாரம் வழங்கப்படுகிறது. விவசாயி அல்லது புலி சின்னம் ஒதுக்க கோரப்பட்டு உள்ளது. ஆனால் இந்த சின்னங்கள் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருப்பதால் நாம் தமிழர் கட்சிக்கு ஒதுக்க முடியாது.

Daily Thanthi, Dated: 11-01-2025




டெல்லியில் அரவிந்த் கெஜ்ரிவால் வீட்டு முன்பு போராட்டம் நடத்திய பா.ஜனதா தொண்டர்களை கலைக்க அவர்கள் மீது போலீசார் தண்ணீரை பீய்ச்சி அடித்து விரட்டிய காட்சி.

## போலி வாக்காளர்கள் விவகாரம்:

# கெஜ்ரிவால் வீட்டு முன் பா.ஜனதா போராட்டம்

புதுடெல்லி, ஜன.11-

பா.ஜனதா போலி வாக்காளர்களை உருவாக்குவதாக கெஜ்ரிவால் தெரிவித்ததை கண்டித்து அவரது வீட்டின் முன்பு பா.ஜனதா தொண்டர்கள் போராட்டம் நடத்தினர்.

### போலி வாக்காளர்கள்

உத்தரபிரதேசம், பீகார் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களின் எல்லையை ஒட்டியுள்ளது பூர்வாஞ்சல். போஜ்புரி மொழி பேசும் இவர்கள், டெல்லியில் கணிசமாக உள்ளனர். டெல்லி வாக்காளர்களில் 25 சதவீத அளவுக்கு இவர்கள் உள்ளனர்.

டெல்லியில் தேர்தல் நடத்தை விதிகள் அமலாகியுள்ள நிலையில் புதுடெல்லி தொகுதி பா.ஜனதா வேட்பாளர் தேர்தல் விதிமுறைகளை மீறியதாக முதல்-மந்திரி அதிஷி மற்றும் முன்னாள் முதல்-மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால் ஆகியோர் தேர்தல் கமிஷனில் நேற்று முன்தினம் மனு அளித்தனர். அப்போது, பா.ஜனதா பூர்வாஞ்சலில் இருந்து மக்களை கொண்டு வந்து போலி வாக்காளர்களை உருவாக்குவதாக கெஜ்ரிவால் தெரிவித்து உள்ளார்.

### வீட்டு முன்பு போராட்டம்

இந்த வாதத்தை பா.ஜனதா அரசியலாக்கிக் கொண்டது. பூர்வாஞ்சல் மக்களை அவர் புண்படுத்துவதாக எதிர்வாதம் வைத்து, அவரது வீட்டு முன் நேற்று போராட்டம் நடத்தியது. போராட்டக்காரர்கள் கெஜ்ரிவால் வீட்டை நெருங்கி விடாமல் இருக்க போலீசார் தடுப்பு அமைத்தனர். அதனை தாண்ட பா.ஜனதாவினர் முயன்றபோது போலீசார் தண்ணீர் பீரங்கிகளை பயன்படுத்தி அவர்களை கலைத்தனர். இந்த போராட்டத்தால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஏற்கனவே பிரதமர் மோடி, இந்த மக்களுக்கு டெல்லி அரசு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க தவறிவிட்டது என கூறியிருந்தார். இதற்காக அந்த மக்கள் பிப்ரவரி 5-ந்தேதி ஆம் ஆத்மியை பழி வாங்குவார்கள் என பா.ஜனதா எம்.பி. மனோஜ் திவாரி கூறியுள்ளார்.

Daily Thanthi
Dated: 11.01.2025

நாடாளுமன்ற தேர்தலில் வாக்கு வங்கி அதிகரிப்பு:

## நாம் தமிழர் கட்சிக்கு மாநில கட்சி அங்கீகாரம்

### இந்திய தேர்தல் கமிஷன் அறிவிப்பு

சென்னை, ஜன.11-

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளரான சீமானால் தொடங்கப்பட்டு, 2013-ம் ஆண்டு இந்திய தேர்தல் கமிஷனில் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டது. 2016-ம் ஆண்டு முதல் சட்டமன்ற தேர்தலை சந்தித்த அக்கட்சி இரட்டை மெழுகுவர்த்தி சின்னத்தில் போட்டியிட்டு 4 லட்சத்து 58 ஆயிரத்து 104 வாக்குகள் (1.07 சதவீதம்) பெற்றது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழகம், புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் மைக் (ஒலிவாங்கி) சின்னத்தில் தனித்து களம் இறங்கி தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளில் 35 லட்சத்து 60 ஆயிரத்து 485 வாக்குகளை (8.22 சதவீதம்) பெற்றது. அந்தவகையில் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் 8.22 சதவீத வாக்குகளை பெற்றதால் நாம் தமிழர் கட்சிக்கு மாநில கட்சி அங்கீகாரத்தை இந்திய தேர்தல் கமிஷன் அளித்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல் கமிஷன் நேற்று பிறப்பித்த உத்தரவில், 'நாம் தமிழர் கட்சிக்கு மாநில கட்சி அங்கீகாரம் வழங்கப்படுகிறது. கட்சிக்கு விவசாயி மாடு பூட்டி ஏர் உழுவது போன்ற சின்னம் அல்லது புலி உருவத்தை கொண்ட சின்னம் ஒதுக்க கோரப்பட்டுள்ளது. விவசாயி மாடு பூட்டி ஏர் உழுவது போன்ற சின்னம் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட சின்னத்துடன் ஒத்திருப்பதாலும், புலி சின்னத்தை பொறுத்தமட்டில் விலங்கை சித்தரிப்பதாலும் இந்த சின்னங்களை தங்கள் கட்சிக்கு ஒதுக்க முடியவில்லை.

தேர்தல் கமிஷனின் வலைதளத்தில் இடம்பெற்றுள்ள இலவச சின்னங்களின் பட்டியலில் இருந்து ஏதாவது ஒரு சின்னத்தை முன்மொழியவோ அல்லது சின்னத்தின் வடிவமைப்பு மற்றும் வரைபடத்துடன் 3 புதிய சின்னங்களை பரிசீலனைக்கு அனுப்பிவைக்கவோ அறிவுறுத்தப்படுகிறது' என கூறப்பட்டுள்ளது.

Dinamalar
Dated: 11.01.2025

## சீமான் கட்சிக்கு கிடைத்தது அங்கீகாரம்

**புதுடில்லி, ஜன. 11-**

நாம் தமிழர் கட்சியை மாநில கட்சியாக அங்கீகரித்து தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

சீமானை தலைமை ஒருங்கிணைப்பாளராக கொண்டு கடந்த 2010ல் நாம் தமிழர் கட்சி துவங்கப்பட்டது. 2016ல் இருந்து இந்த கட்சி தேர்தல்களில் போட்டியிட்டு வருகிறது.

கட்சிக்கு தேர்தல் அங்கீகாரம் கிடைக்காத காரணத்தால் இரட்டை மெழுகு வர்த்தி, விவசாயி, மைக் ஆகிய சின்னங்களில் போட்டியிட்டனர்.

இந்நிலையில், கடந்த லோக்சபா தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிட்டு 8.22 சதவீதம் ஓட்டுகளை பெற்றது. இதன் அடிப்படையில் நாம் தமிழர் கட்சிக்கு மாநில கட்சிக்கான அங்கீகாரத்தை தலைமை தேர்தல் கமிஷன் வழங்கியுள்ளது.

கூடவே, தேர்தல் கமிஷனின் பட்டியலில் உள்ள ஏதேனும் ஒரு சின்னத்தை தேர்வு செய்யலாம் எனக் கூறியுள்ளது.

இந்த தகவலை; நாம் தமிழர் கட்சி தன் எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

DINAMALAR

Dated: 11.01.2025

# பதிவு பெறாத ஜாதி கட்சிகளை தடை செய்ய வழக்கு

**மதுரை, ஜன. 11–**

மதுரை வழக்கறிஞர் செல்வகுமார், உயர் நீதி மன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த பொது நல மனு:

நவீன யுகத்திலும் தீண்டாமை உருமாற்றம் பெற்று வன்கொடுமையாக மாறுகிறது.

அனைத்து சமூகங்களிலும், சிலர் சுயநலனுக்காக அவர்கள் சார்ந்துள்ள ஜாதியின் பெயரால் ஒரு அமைப்பை உருவாக்குகின்றனர். அதை தேர்தல் கமிஷனில் முறையாக பதிவு செய்வதில்லை; தேர்தலிலும் போட்டியிடுவதில்லை.

ஏதாவது ஒரு அரசியல் கட்சியை சார்ந்து செயல்படுகின்றனர்.

வாழ்வாதாரத்தை பெருக்க பொதுவெளியில் வெறுப்பு பேச்சுகளால் இளைஞர்களிடம் வன்மத்தை தூண்டுகின்றனர்.



கருத்து சுதந்திரம் என்ற பெயரில், 'யு டியூப்' சேனல்களை உருவாக்கி வெறுப்புணர்வை துாண்டி, சமூக அமைதியை சீர்குலைக்கின்றனர். ஜாதிகளின் பெயரில் சங்கங்களை உருவாக்குவோரில் சிலர், விதிகள்படி செயல்படுவதில்லை. ஆண்டறிக்கை தாக்கல் செய்வதில்லை.

பெயரளவிற்கு பதிவு செய்து, பிற சமூகத்தினரை இழிவுபடுத்தி வெறுப்புணர்வை விதைக்கின்றனர். இதை தடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது; இதுவரை, நடவடிக்கை இல்லை.

தேர்தல் கமிஷனில் முறையாக பதிவு பெறாத, தேர்தலில் போட்டியிடாத அனைத்து ஜாதி கட்சிகள், சங்கப் பதிவு சட்டப்படி முறையாக செயல்படாத ஜாதி சங்கங்கள், ஜாதி சார்ந்து செயல்படும், 'யு டியூப்' சேனல்களை தடை செய்யக்கோரி தமிழக அரசுக்கு மனு அனுப்பினேன். நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு குறிப்பிட்டார்.

நீதிபதிகள் எம்.எஸ். ரமேஷ், ஏ.டி.மரியா கிளீட் அமர்வு, தமிழக உள்துறை, வணிக வரி மற்றும் பதிவுத்துறை செயலர்கள், டி.ஜி.பி.,க்கு நோட்டீஸ் அனுப்பி பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு, பிப்., 19க்கு ஒத்திவைத்தது.